★ வடகிழக்கு இணைப்பு சர்வஜன வாக்கெடுப்பை

# ஒத்திவைக்குமாறு இந்தியா கேட்கிறது

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்காக கிழக்கு மாகாணத்திற்கு மட்டுமென நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள சர்வஜன வாக்கெடுப்பை இவ்வருட இறுதி வரையும் ஒத்திவைக்குமாறு இந்திய அரசு இலங்கையிடம் கோரியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இந்த சர்வஜன வாக்கெடுப்பை எதிர் வரும் ஜுலை மாதத்தில் நடத்தப்போவதாக அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. அப்போது வடகிழக்கு மாகாண அரசு, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புக்கள் இதனைக் கண்டித்து அறிக்கை விட்டதுடன் சர்வஜன வாக்கெடுப்பை காலவரையின்றி ஒத்திப்போடுமாறு கோரியிருந்தன. ''சர்வஜன வாக்கெடுப்பை தாங்கள் எதிர்க்கவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தப்படி இது நடத்தப்படவேண்டும். ஆனால், இதனை ஒத்திவைக்குமாறு மட்டுமே கேட்கின்றோம்'' என்று இந்திய தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


விலை ரூபா 2-50 பக்கங்கள் எட்டு

# முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

முரசு 3 ஒலி 99 திங்கள் 20 - 03 - 1989 (பங்குனி 07) ஷஃபான் 11


● சபாநாயகர் தமிழ்க்குடிமகன் ஜெயலலிதாவிடம் எழுத்தில் விளக்கம் கோரியுள்ளார்

# கருணாநிதியின் சதி வலையுள் ஜெயலலிதா சிக்குண்டாரா?

## ராஜிநாமாவை ஜெயலலிதா மறுக்கிறார்; சதித்திட்டத்தை கருணாநிதி மறுக்கிறார்

(சென்னை)

சட்டமன்ற உறுப்பினர் பதவி. எதிர்க்கட்சி தலைவர் பதவி ஆகியவைகளிலிருந்து விலகுவதாகவும், அரசியலிலிருந்து ஒதுங்குவதாகவும் செல்வி ஜெயலலிதாவினால் எழுதப்பட்ட கடிதங்களும், அவற்றுக்கு ஜெயலலிதா தெரிவித்துள்ள மறுப்புகளும், தமிழக அரசியலிலிருந்து இவரை வெளியேற்ற தி-மு-க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி மேற்கொண்ட சதி முயற்சி என்றும், அந்த வலையில் ஜெயலலிதா சிக்குண்டு விட்டார் என்றும் தமிழக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

தனக்கு எதிராகக் கூறப்பட்டுள்ள புகார்களை கலைஞர் கருணாநிதி முற்றுமுழுதாக மறுததுள்ளதுடன் முறைகேடான முறையில் எவரையும் சட்டப்பேரவையிலிருந்து துரத்தும் எண்ணம் தி. மு க. வுக்குக் கிடையாதென்றும், இந்த விவகாரம் அ.தி.மு.க. வின் உள்நெருக்கடியுடன் சம்பந்தப்பட்டதென்றும் கூறியுள்ளார்.

சட்டப்பேரவை எதிர்க்கட்சித்தலைவர் செல்வி ஜெயலலிதாவின் சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவது பற்றிய கடிதம் பற்றி விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாயும், அதற்கான பதில் கிடைத்த பின்பே ராஜிநாமா பற்றி தக்க நடவடிக்கை எடுக்க முடியும் என தமிழக சட்டப்பேரவை தலைவர் திரு.

→ 8 ஆம் பக்கம் பார்க்க



## 'ஜே' பதவிவிலக விரும்பியது உண்மை என்கிறார் 'எஸ்,டி.எஸ்'

(சென்னை)

அரசியலிலிருந்து ஒதுங்குவதாக ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கை அவரது உதவியாளர் நடராஜன் வீட்டிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதெனவும் அதனை அவர் பத்திரிகைகளுக்கோ சட்டப்பேரவைத் தலைவருக்கோ அனுப்பிவைக்கவில்லை எனவும அண்ணா தி. மு. க. வின் துணைப்பொதுச் செயலாளர் எஸ் டி.சோமசுந்தரம் தெரி

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்-வவுனியா வீதித்திருத்தம் திடீரென இடைநிறுத்தம்

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படவிருந்த வவுனியா-யாழ் வீதி திருத்தவேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன

கண்டிவீதியின் இந்தப் பகுதியை திருத்தி அமைப்பதற்கான வேலைகள் இவ்வாரம் ஆரம்பிக்கப்படவிருந்தன. நவீன முறையில் இந்த வேலையை மேற்கொள்வதற்கான பொறுப்பு கொழும்பி

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## 48 மணித்தியாலத்துக்குள் தெற்கில் ஆறு பேர் கொலை

தென்பகுதியில் கடந்த நாற்பத்தெட்டு மணித்தியாலத்தில் ஆறு பேர் ஜே. வி.பியினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

எல்பிட்டிய, ஹொரவப்பொத்தன, மதவாச்சி, சப்ராகமுவ, பொலநறுவ, கம்பஹா ஆகிய இடங்களில் இக்கொலைகள் நடைபெற்றுள்ளன.

தென்பகுதியில் உள்ள மாகாணசபையின் இரு உறுப்பினர்களின் வீடுகளும் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கோபாலசாமி மன்னிப்புக் கோரவேண்டும்

சட்டவிரோதமாக இலங்கைக்குள் வந்துபோன தி. மு. க. எம். பி. திரு. வை. கோபாலசாமி தமது செய

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## சபாநாயகம் மத்திய கல்வி அமைச்சில்

வடமாகாண கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. வெற்றிவேலு சபாநாயகம் கொழும்பிலுள்ள மத்

→ 8 ஆம் பக்கம் பார்க்க

பணமோசடிக் குற்றச்சாட்டைத் தொடர்ந்து

## ஜெயலலிதாவின் உதவியாளர் நடராஜன் கைது; வீடு சோதனை

(சென்னை)

தமிழகஅரசியலில் அண்மைக் காலத்தில் சர்ச்சைக்குரிய ஒருவராக கருதப்படும் ஜெயலலிதாவின் நெருங்கிய உதவியாளரும் அரசியல் ஆலோசகருமான திரு. நடராஜன் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சென்னையிலுள்ள அவரது வீடு பொலிஸாரால் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டதாகவும் அப்போது முக்கியமான ஆவணங்கள் பலவும் கைப்பற்றப்பட்டதாகவும் சென்னை நகர பொலிஸ் கமி

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## புலோலி தெற்கு, புற்றளையில் திடீர் தேடுதல்; மூவர் மரணம்

புலோலி தெற்கு புற்றளை பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற சுற்றிவளைப்பினால் இப்பகுதியில் திடீர் பதற்றம் ஏற்பட்டது.

இங்கு மூன்று இளைஞர் மரணமானதாகத் தெரியவந்துள்ளது. இச்சம்பவத்தையடுத்து பருத்தித்துறை பகுதிக்கான பஸ் சேவைகள் யாவும் நேற்று நண்பகலுடன் முற்றாக நிறுத்தப்பட்டன. மினிபஸ் சேவைகளும் இடம்பெறவில்லை. சம்பவம் இடம்பெற்ற இடத்தில் தொடர்ந்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இச்சம்பவத்தால் புலோலி, மந்திகை, பருத்தித்துறைப் பகுதியில் கடைகள் யாவும் பூட்டப்பட்டன. வாகனப்போக்குவரத்துக்கள் காணப்படவில்லை.

## தமிழ் பயணிகளின் மீது கோட்டையில் கெடுபிடி

கொழும்பு கோட்டைபுகையிரத நிலையத்தில் தமிழ்ப்பயணிகள் மீதான பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்புக் கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம், வவுனியா பகுதிகளுக்கான யாழ்தேவி ரயில் சேவை காலை ஐந்தேமுக்கால் மணிக்கு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் புகையிரதத்தை பிடிப்பதற்கென வரும் பயணிகள் அங்குள்ள தனியார் பாதுகாப்பு சேவையினரால் பலமாக சோதனையிடப்பட்ட பின்னரே புகையிரத நிலைய மேடைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். யாழ்தேவி ரயிலை பிடிப்பதற்கு பிரயாணிகள் முண்டியடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஏற்படும் இந்த சோதனை இடம்பெறுகிறது.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி பேட்டி:

## தமிழீழப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும்

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு கூட்டாட்சி முறை மூலம் தீர்வு காண்பதற்காக பிரேமதாஸ அரசாங்கத்திற்கு ஆறு மாதகால அவகசம் கொடுக்கலாம் என்று தெரிவித்துள்ள இந்தியாவின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி, இவ்வாறு பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால் ஒரு சுதந்திர ஈழத்திற்கான போராட்டத்தை நாம் மீண்டும் ஆரம்பிக்கவேண்டியிருக்

→ 8 ஆம் பக்கம் பார்க்க

# நன்றி கூறுகிறோம் !

சென்ற 4. 3 89 திகதிய சஞ்சீவி மூலமும் 8. 3. 89 திகதிய முரசொலி மூலமும் விடுக்கப்பட்ட ருதுசோபன விழா அழைப்பைக் கௌரவித்து, சென்ற 9 3, 89 அன்று நடைபெற்ற எமது சிரேஷ்ட புத்திரி செல்வி பகீரதி அவர்களின் பூப்புனித நீராட்டு விழாவின் போது வருகை தந்து, உதவிகள் செய்த, அன்பளிப்புகள், பரிசுகள் நலகிச் சிறப்பித்த அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றியை இத்தால் தெரிவித்துக்கொள்கிறோம்.

''சுதாபதி'' இங்ஙனம்
958/9, கே. கே. எஸ். வீதி, செ தங்கராஜா
நாச்சிமார்கோவிலடி (கட்டிடப்படவரைஞர்)
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

03565

---

## வெற்றிடங்கள் நிரப்புதல்

### இளைப்பாறிய பொது சுகாதார பரிசோதகரை

## பதவியில் மீளமர்த்தல்

சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பொது சுகாதார பரிசோதகர்களாகக் கடமையாற்றி இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்களை யாழ்ப்பாணம் / கிளிநொச்சி மாவட்டங்களில் சேவையில் மீளமர்த்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. எனவே சேவையில் மீளமர விரும்பும் உத்தியோகத்தர்கள் இப்பணிமனைக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் 31. 3. 89 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

டாக்டர் ந, கனகசபை
சுகாதார சேவை
பிராந்தியப் பணிப்பாளர்,
சு. சே. பி. ப. பணிமனை யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம்.
10. 03. 89.

03545

---

வல்லுனர் பட்டியல்

## வடக்குக்கிழக்கு மாகாண அரசின்

## காணி, விவசாய அமைச்சு

அமைச்சினுல் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு, நிபுணர்களின் சேவைகள் தேவைப்படுகின்றது. மேற்படி நிபுணர்களின் சேவையை இலகுவாக ஏற்படுத்திக்கொள்வதற்காக காணி, விவசாய அமைச்சினுல் மேற்படி நிபுணர்களின் விபரத் தொகுப்பு ஒன்றினைத் தயாரிக்கவேண்டியுள்ளது.

அரசாங்க திணைக்களங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் கடமையாற்றுவோரிடமிருந்தும் அரச சேவையில் இல்லாதோரிடமிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

நிபுணத்துவத்தின் விபரம்
01. காணியும் நீர்ப்பாவனையும்
02. காணி அபிவிருத்தி
03. வன முகாமைத்துவம்
04. மரப் பாவனை
05. விவசாயம்
06 மணல் விஞ்ஞானம்
07. விவசாயப் பொருளியல்
08. விவசாயப் பொறியியல்
09. தோட்டக்கலை
10 விஞ்ஞான ரீதியான விவசாயம்
11. பண்ணை முகாமைத்துவம்
12. நீர்வளப் புவியியல்
13 கால்நடை வளர்ப்பு
14. கோழிப்பண்ணை முகாமைத்துவம்
15. பால்ப்பண்ணை முகாமைத்துவம்

விண்ணப்பதாரிகள் தங்களது சொந்த விபரங்களைக் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

செயலாளர்,
காணி, விவசாய அமைச்சு
மாகாணசபைச் செயலகம்,
திருக்கோணமலை.

விண்ணப்ப முடிவு திகதி 25. 04. 1989 விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். இரண்டு கிழமைக்குள் விண்ணப்பம் கிடைத்தமைபற்றி அறிவித்தல் கிடைக்காது போயின், விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தின் பிரதியொன்றினை அனுப்பிவைத்தல் வேண்டும்.

மாகாணசபைச் செயலகம், செயலாளர்
திருக்கோணமலை. காணி,விவசாய அமைச்சு.

03553

---

### கூட்டம்

(சங்கானை)

அரசாங்கம் பொறுப்பேற்ற தோட்டப் பாடசாலைகளில் தொடர்ந்து 120 மாதங்கள் ஆசிரியர்களாக கடமையாற்றியும் இதுவரை ஒய்வூதியம் பெறமுடியாது இருபபவர்கள் ஒன்று சேர்ந்து நலன்புரிசங்கமொன்றை நிறுவி ஒய்வூதியம் பெறுவது பற்றி ஆராயவிருக்கின்றனர்

இந்த நலன்புரிச்சங்கத்தின் அங்குரார்ப் பணக் கூட்டம் இம்மாதம் 23-ம் திகதி வியாழக்கிழமையன்று முற்பகல் பத்து மணிக்கு யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியிலுள்ள பாரதி பாஷா பாடசாலைக்கு பக்கத்திலுள்ள ஆலய கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

## சிறு விளம்பரம்

### புத்தகம்

மல்லிகை என்ற பெயர் இலக்கிய உலகில் ஒருகலைத்துவ முத்திரை. ஆண்டு மலர்கள் அதன் தனித்துவ சாதனை. தரமான சுவைஞர்கள் தேடித் திரிந்து அடைந்து ரசித்து வாசிக்கும் சஞ்சிகை. படிப்பதுடன் அதைப் பலரும் மிகக் கவனமாகப் பாதுகாத்தும் வைத்துள்ளனர். நாளைய தலைமுறைக்கு அவசியம் தேவைப்படும். சேமித்து வைப்பது முக்கியகடமை. விலை ரூபா பத்து. மல்லிகைப் பந்தல், 234/B கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 03569

### கல்வி

அன்பு கல்வி நிறுவனத்தின் ஆதரவில் 1-ம் ஆண்டு தொடக்கம் 10-ம் ஆண்டு வரை, எல்லாப் பாடங்களும் மாலையில் நடைபெறுகின்றன. பாடத்திற்கேற்ற தனித்துவமான ஆசிரியர் குழு. குறைந்த கட்டணம். நிறைந்த கல்வி, உயர் கலைக் கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். 03534

### விற்பனைக்கு

விரைவில் ஒல்லாந்திலிருந்து இறக்குமதியாகவிருக்கும் பூனு ரக சிவப்பு பம்பாய் வெங்காய விதை தேவைப்படுவோர் முன்னதாகவே பதிவு செய்யுங்கள். பிள்ளையார், 251, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 03525

### கல்வி

அன்பு பாலர் பாடசாலை (கிளை) பாலராசிரியர் சங்க மேற்பார்வையில், 3க்கும் 5க்குமிடைப் பட்ட வயதுள்ள பாலர்களுக்கு 'மொன்ரிசோறி' முறையினை, தமிழ்ப் பண்பாட்டுக்குரிய வகையில், பாலராசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியரினுல் கற்பிக்கப்படுகின்றது. உயர் கலைக் கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். 03536

## உள்ளூர்த்திரைகளில்

ஹரன் வெண்திரையில்
10-30, 2-30, 4-45
NINJA U. S. A.
கலர்
பயங்கர சண்டைகள்
நிறைந்த படம்
03575

நியூ சாந்தி (யாழ்நகர்)
காலை 10.30, 2.30
இன்று முதல்
"STREETS OF FIRE"
03576

---

### இலங்கை மின்சார சபை

### ஜெனறேட்டர் ஏற்றியிறக்கல்

## கேள்விப் பத்திரங்கள் கோரல்

கீழ்க் காட்டப் பெற்றவாறு ஜெனறேட்டர் ஏற்றியிறக்குதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன:

1. 100 கே. வி. ஏ. ஜெனறேட்டர் குறிகாட்டுவானிலிருந்து நஞதீவுக்கு ஏற்றியிறக்குதல்.
   எண்ணிக்கை: 01
2. 55 கே வி. ஏ. ஜெனறேட்டர் நஞதீவிலிருந்து சுன்ஞகம் இலங்கை மின்சார சபை அலுவலகத்துக்கு ஏற்றியிறக்குதல்.
   எண்ணிக்கை: 01
3. 25 கே. வி. ஏ. ஜெனறேட்டர் குறிகாட்டுவானிலிருந்து அனலைதீவுக்கு ஏற்றியிறக்குதல்.
   எண்ணிக்கை: 01
4. 11 கே. வி ஏ. ஜெனறேட்டர் அனலைதீவிலிருந்து சுன்ஞகம் இலங்கை மின்சார சபை அலுவலகத்துக்கு ஏற்றியிறக்குதல்.
   எண்ணிக்கை: 01

- மேற்படி தனிப்பணி ஒவ்வொன்றுக்கும் வெவ்வேருக விகிதம் குறிப்பிடவும்.
- கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி: 28. 03. 89, காலை 10. 00 மணி.

சுன்ஞகம், மின்சார பொறியியலாளர்,
1989. 03. 09. யாழ்ப்பாணப் பிரதேசம்.

03552

---

## நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலன சபையின் இரண்டாவது பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆலய பரிபாலன சபையின் இரண்டாவது பொதுக் கூட்டம் 26-03-1989-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு ஆலய முன்மண்டபத்தில் நடைபெறும். பொதுச் சபை உறுப்பினர்கள் தவருது பங்குபற்றும்படி கேட்டுக்கொள்கிறோம், சிவனடியார்கள் பார்வையாளர்களாக கலந்து கொள்ளலாம்.

வ. பரமசிவம்
செயலாளர்.

03558

---

## 49 வருடகால சேவையில் ரூபா 800,000,000/- க்கு

மேற்பட்ட நிலையான சொத்துக்களை உள்ளடக்கி நாடுமுழுவதும் 28 கிளை ஸ்தாபனங்களையும் கொண்டது

The Finance Co Ltd
TFC
ESTD - 1940
YOUR SUCCESS IS OUR GOAL

## த பினன்ஸ் கம்பனி லிமிட்டட்

249, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்

(தலைமையகம்:செலின்கோ மாளிகை, கொழும்பு-1)

03508

## நல்வாக்கு

அரசியல் அதிகாரங்களை கையில் வைத்திருப்பவர்களை விட அதிகாரத்திற்கு வெளியே இருப்பவர்களிடம் தான் உண்மையான அதிகாரமும் செல்வாக்கும் உள்ளது.

- மகாத்மாகாந்தி

ஆர், ஜி. பில்டிங்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# இதயநாதம்

## செயற்படும் திட்டமா?

தனியார்துறையினருக்கென மட்டும் நடைமுறையிலிருந்துவரும் ஊழியர் சேமலாபநிதித் திட்டத்தை, பென்ஷனாக மாற்றப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம், தனியார்துறையிலுள்ள ஊழியர்களும், அரசாங்கசேவை ஊழியர்களைப் போன்று, குறிப்பிட்ட வயதெல்லைக்குப் பின்னர் சேவையிலிருந்து நீங்கியதும், பென்ஷன் பணத்தைப் பெறுவரென்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்க பென்ஷன்காரருக்குரிய சகல உரிமைகளும், சலுகைகளும் இவர்களுக்கும் கிடைக்குமென்றும்கூட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில், தனியார்துறையிலுள்ள அனைவருமே அரசாங்கத்தின் புதிய பென்ஷன் திட்டம் பற்றிய அறிவிப்பினால் மகிழ்ச்சியடைந்திருப்பர்.

''கோழி மேய்த்தாலும் கோரணமேந்தில் மேய்க்க வேண்டும்'' என்று அரசாங்க வேலைக்குத் தனியான மதிப்பு தமிழர் சமூகத்திலுண்டு.

கலியாணப் பேச்சு நடக்கும்போது, இப்போதும், அரசாங்க சேவையாளருக்கு தனியான ஒரு மார்க்கட் இருந்து வருகின்றது.

இதற்கெல்லாம் காரணம், இவர்கள் பென்ஷன் பெறும் தொழிலைச் செய்வதுதான்.

இந்த வகையில் பார்க்கும்போது, தமக்கும் பென்ஷன் கிடைக்கப் போகின்றதென்றால் எந்தத் தனியார் துறை ஊழியர்தான் மகிழ்ச்சியடைய மாட்டார்?

அரசாங்க அறிவித்தலின்படி, நாடுமுழுவதுமுள்ள சுமார் முப்பது லட்சம் தனியார்துறை ஊழியர்கள் பென்ஷன் பெறும் தகுதியைப் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களின் மகிழ்ச்சி ஒருபுறமிருக்க, இந்தத் திட்டத்தை உண்மையாகவே அரசினால் செயற்படுத்த முடியுமா என்பதை நாம் நிதானமாகக் கவனித்துப் பார்க்க வேண்டும்.

முன்னரும் ஒருதடவை இதேமாதிரியான அறிவிப்பு வந்ததாயினும், பின்னர் மௌனமாகவே அது மறைக்கப்பட்டு விட்டது. இதனால் பலரும் இதனை மறந்தே விட்டனர்.

இதே போன்று, கடந்த ஸ்ரீமாவோ ஆட்சிக்காலத்தில் புதிதாக அரசாங்க சேவையில் சேருபவர்களுக்கு பென்ஷன் இல்லையென்ற அறிவிப்பு வந்ததுமுண்டு.

அடுத்து வந்த அரசாங்கத்தால் இது ரத்துச் செய்யப்பட்டு பென்ஷன் திட்டமே பின்னர் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இவைகளை நாம் இப்போது நினைவு படுத்திக் கொள்வது அவசியம்.

அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கு பலநூறு கோடி ரூபா பணம் இப்பொழுது தேவைப்படுகின்றது.

எனவே, ஊழியர் சேமலாப நிதிப்பணத்தை இப்போது முடக்கி வைத்தால், அதனை அரசு தனது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்த முடியும்.

ஒவ்வொருமாதமும் பலகோடி ரூபா பணம், தனியார்துறை ஊழியர்களுக்கு சேமலாப நிதியாக வழங்க அரசுக்குத் தேவைப்படுகின்றது.

பென்ஷனாக வழங்குவதென்றால், இந்த சேமலாப நிதியை உடனடியாக ஊழியர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய 'நிதி நெருக்கடி' நிலையும் ஏற்படாது.

இதற்காகவே தனியார் துறையினருக்கு பென்ஷன் திட்டம் அறிமுகமாகின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்படுகின்றது.

அதுமட்டுமன்றி, காலக்கிரமத்தில் ஆட்சிக்கு வரும் இன்னொரு அரசாங்கம் புதிய பென்ஷன் திட்டத்தை ரத்துச் செய்துவிட்டு, மீண்டும் சேமலாப நிதித்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

எனவே, பல லட்சம் தனியார் துறையினரின் எதிர்காலத்துடன் சம்பந்தப்பட்ட இவ்விடயத்தில், அரசு உண்மையுடனும், இதய சுத்தியுடனும் செயற்பட வேண்டும்.

நாட்டின் முதுகெலும்பான தனியார்துறை ஊழியர்களைப் பந்தாடக்கூடாது.

# பட்ஜட் விவாத நேரம் நீடிப்பு கட்சித்தலைவர்கள் தீர்மானம்

வரவுசெலவு திட்ட விவாத நேரத்தை 144 மணி நேரத்திற்கு நீடிப்பதென புதன்கிழமை இடம்பெற்ற அனைத்து கட்சி தலைவர்கள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரவுசெலவுதிட்ட விவாதத்தை 17 நாட்களில் 72 மணி நேரமாகக் குறைப்பதென சபைமுதல்வர் ரணில் விக்கிரமசிங்க புதன்கிழமை பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணை எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பால் வாபஸ் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருட வரவுசெலவு திட்டவிவாதம் 138 மணி நேரம் நடைபெற்றதையும் இம்முறை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையும் கட்சித்தலைவர்கள் கவனத்தில் கொண்டு 18 நாட்களில் 144 மணிநேரம் விவாதம் நடத்துவதென தீர்மானித்துள்ளனர்.

## முத்திரை தீர்வை இரண்டு ரூபா

புதிய வரவு செலவுத் திட்டப்படி முத்திரைத் தீர்வை ஒரு ரூபாவிலிருந்து இரண்டு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது இனிமேல் பணக்கொடுக்கல் வாங்கல்களின் போது நூறு ரூபாவிற்கு மேற்பட்ட தொகைப் பணத்திற்கு இரண்டு ரூபா முத்திரையே ஒட்டப்பட்டு கையொப்பமிடப்படல் வேண்டும்.

## முப்பது கொலைகள் புரிந்த ஒருவர் பொலிஸினால் கைது

பொதுத்தேர்தல் கடமையின்போது கொல்லப்பட்ட இணையமைச்சர் மல்லிமாராச்சியின் மகன் ஜெயந்த மல்லிமாராச்சியின் கொலை சம்பந்தமாக கைதான நான்கு சந்தேகநபர்களில் ஒருவர் மேலும் முப்பது கொலைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேராசிரியர் விஜேசுந்தர, மக்கள் கட்சித்தலைவர் விஜேகுமாரணதுங்க. ஐ. தே. கட்சி பொதுச் செயலாளர் நந்தனல் பெர்னாண்டோ, பிரதி பொலிஸ் மா அதிபர் ரெரென்ஸ் பெரேரா ஆகியோரின் கொலைகளுக்கு இவரே சூத்திரதாரி என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தொண்டமானாறு வெளிக்கள நிலைய பரீட்சைகள்

தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் ஆண்டுகள் 12, 13 ற்கான பரீட்சைகள் இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று வெளிக்கள நிலையத் தலைவரும் விஞ்ஞானக் கல்வி அதிகாரியுமான திரு. ச. செல்லத்துரை தெரிவித்துள்ளார்.

28 ஆம் திகதி கலையியல் பரீட்சையும், ஏப்ரல் 8 ஆம் திகதி விஞ்ஞான, வர்த்தகப் பரீட்சைகளும் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மேலும் சில பகுதிகளுக்கு தேர்தல் ஆட்சேப வழக்குகள்

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் இரத்தினபுரி, திகாமடுல்ல, அம்பாந்தோட்டை, கேகாலை, புத்தளம் ஆகிய பகுதிகளுக்கு தேர்தல் ஆட்சேப வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளை விசாரணை செய்வதற்கு ஐந்து நீதியரசர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நீதியரசர்கள் திரு. டபிள்யூ என். டி. பெரேரா, எஸ் ஜே டி. எஸ் விஜயரட்ன, எஸ், ஆனந்தகுமாரசாமி, சரத் என் சில்வா, கே பாலகிட்னர் ஆகியோரே இதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம்

## நாடு திரும்பிய அகதிகளுக்கு வீடுகள் கட்ட நிதி உதவி

(சங்கானை)

ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு உயர் ஸ்தானிகராயலம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இந்தியா சென்று கப்பல் மூலம் திரும்பிய அகதிகளுக்காக ஒன்பது வீடுகளை இரண்டாம் கட்டமாக நிறுவிக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மாதகல் கிராமசேவை அலுவலர் பிரிவில் எட்டு வீடுகளும், சில்லாலை கிராம சேவை அலுவலர் பிரிவில் ஒரு வீடும் நிறுவப்படவுள்ளது. ஒவ்வொரு வீடும் தலா பதினைந்தாயிரம் ரூபா பெறுமதியானவையாகும்.

இதே வேளை ஐக்கிய நாடு அகதிகள் புனர் வாழ்வு உயர் ஸ்தானிகராலயம் முதலாம் கட்டமாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாதகல் துறையிலும், ஆனைக்கோட்டை கூளாவடியிலும் இரு வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளதாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வீடமைப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. க. தெய்வேந்திரம் தெரிவித்தார்.

## இரத்ததானம்

மானிப்பாய் கோவில்பற்றுலியோ கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததானத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர்கல்லூரி, மானிப்பாய் ஆங்கிலபாடசாலை, மானிப்பாய் மாணவர்கள் கலந்து. கொண்டனர். இரத்ததானம் வழங்கும் வைபவம் மானிப்பாய் இந்துக் கல்லூரி நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

## வாசுகி ஜெகநாதனின் ஓவிய அரங்கேற்றம்

யாழ் பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் செல்வி வாசுகி ஜெகநாதனின் ஓவிய அரங்கேற்றப் நாளை 21-ம்திகதி முதல் 26-ம் திகதி வரை முதலாம் குறுக்குத்தெருவிலுள்ள யாழ். பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான 2-ம் வருட மாணவியான செல்வி வாசுகி ஜெகநாதன் வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார். பாடசாலை நாட்களின் ஓவிய ஆசிரியர் திருமதி சின்னப்புவின் ஊக்குவிப்பினால் ஓவியக்கலையில் ஈடுபாடு கொண்ட இவர் தொடர்ந்து ஓவியர் ஏ.மார்க்குவிடம் பெற்றுக் கொண்ட பயிற்சியினால் நவீன பாணி ஓவியங்களை நம் காட்சிக்கு வைக்கிறார்.

ஓவியர்கள் தமக்கென ஓர் தனிப் பாணியைக் கையாளும் பட்சத்திலேயே அவர்கள் சிறந்த படைப்பாளிகளாக நின்றனர் இந்த வகையில் வாசுகியின் படைப்புக்கள் தனித்துவமானவையாக விளங்குகின்றன. மரணச் சுவடு, சக மனிதா, '2-2-89' வழிப்பு (...), முடிவிடம் ஆகிய தலைப்புகளிலுள்ள ஓவியங்கள் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கின்றன. 'சகமனிதர்' என்ற ஓவியத்தில் மனிதரின் முகங்கள் சிதைவுகளாய் சிதைந்த இன்றைய எம் மக்களின் மனத்தை எடுத்துக் காட்டுகின்றன.

இரசாயனவியலிற்குள் கற்றுக் கொண்டவற்றை ஓவியமாக்கி இருக்கும் ஓவியரின் திறமை இங்கு குறிப்பிட்டுக் கூறத்தக்கது அதிர்வு, சமன்பாடு, கணிதக்குறியீடுகள் ஆகிய தலைப்புகளில் கோடுகளையும் வர்ணங்களையும் லாவகமாகக் கையாண்டு விடயத்தை சிறப்பாக விளக்கியுள்ளார்.

மற்றும் யாழ்ப்பாண மண்ணின் பனைகளும், மணற்தரைகளும் இவ் ஓவியரின் படைப்புகளில் அழகு பெறுகின்றன. அல்லப்பிட்டி, மணியம் தோட்டம், குருநகர் ஆகிய தலைப்புகளில் அமைந்திருக்கும் இவ் ஓவியங்கள் அவ்வவ் இடங்களிற்குச் சென்று வரையப்பட்டிருப்பதால் மிகவும் நேர்த்தியாக அமைந்துள்ளன.

கிராமத்துக் காதலர்கள், நிழல்கள் ஆகிய இரண்டு ஓவியங்களும் இவரின் பேனைகளால் உருவாக்கப்பட்ட சிற்பங்களைத் தழுவியதாகஅமைந்திருப்பதால் புதிய பாணியில் வரையப்பட்ட ஓவியங்களாய் மிளிர்கின்றன.

இவர் ஓவியத்தில் காட்டிய அதேயளவு ஈடுபாட்டை சிற்பங்கள் செய்வதிலும் காட்டியுள்ளார். புதிய முறையில் பேனைகளைஒட்டி சிற்பமாக்கியதுடன் சவர்க்காரத்திலும், மரத்தில் செதுக்கியும், சிற்பங்களைச் செய்துள்ளார். இவையும்கூட புதுமையானவையாகவும் நவீனத்துவம் வாய்ந்தனவாகவும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் நிலைமைகள் சீரானமுறையில் இருக்காதபோதும்கூட, கடந்த மூன்றுவருடகாலமாக ஓவியக் கண்காட்சிகள் ஓரளவிற்கேனும் தொடர்ந்து நடைபெற்று வருவது மகிழ்ச்சிதரும் விடயமாகும். இந்த வகையில் ஓவியர் ஏ. மார்க்குவின் மாணவி செல்வி வாசுகி ஜெகநாதனின் ஓவிய அரங்கேற்றமும் ஈழத்தின் ஓவியக்கலை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

★ அருந்ததி சபாநாதன்

# சுழிபுரம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகா


உ
பத்திரகாளியின் பாதம் பணிவோம்

''சொல்லுக் கடங்காவே பராசக்தி
சூரத்தனங்களெல்லாம்
வல்லமை காத்திடுவாள் பராசக்தி
வாழியென்றே துதிப்போம்''.

அருள் வளம் நிறை பத்திரகாளியின் அருள்
அனைவருக்கும் கிடைப்பதாக.

சிறந்தரகத்தேயிலை, மற்றும் உப உணவுப்
பொருட்களை எம்மிடம் மலிவாகப்
பெற்றுக்கொள்ளலாம்.

**'கஜரும்ஸ்'**

பிரதான வீதி, சித்தன்கேணி.

''யாதுமாகி நின்ருய் காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மையெலாம் நின்றன்
செயல் களன்றியில்லை''.

நாடும் மக்களும் நலம் பெற
சுழிபுரம் பத்திரகாளி அம்பாள்
கிருபையை வேண்டுகிறேம்.

பணிப்பாளர், பணியாளர்

**சங்கானை பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்.**

''சக்தியின் பதமே நாம்புகுந்து
பக்தியினல் பாடிப் பலகாலும் – மூத்திநிலை
காண்போம், அதனல் கவலைப்பிணி தீர்ந்து
பூண்போம் அமரப் பொறி.''

எமது அன்பார்ந்த ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் அம்பாளின் அருள்கிடைக்க
அன்போடும் பண்போடும் வேண்டிநிற்கும்

**மொடேர்ண் பார்மஸி**

பிரதான வீதி, சங்கானை.

காளி சரணம் காளி சரணம்

''வல்லமை தாராயோ இந்த
மானிலம் பயனுற வாழ்வதற்கு.''

அனைவருக்கும் அன்னையின் கருணை கிடைக்கட்டும்

**MRS Timber & General Merchants
Transport Service**

(உரிமை: மா. இராசரத்தினம்)

பிரதான வீதி, சங்கானை.


## பொங்கல் சிறப்புமலர் (

## ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் வ

நாளை 21-3-89 செவ்வாய்க் கிழமை சுழிபுரம், ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலயத்தின் விசேட வருடாந்த பொங்கல் விழா நடைபெற உள்ளது. தீரா நோய் தீர்ப்பவளும் அடியவர்கள் வேண்டியவற்றை வேண்டியாங்கு அளிப்பவளும் எம்மை எல்லாம் காத்து ரட்சித்தருள் புரிபவளுமாகிய அம்பாளின் அருளை நாம் அனைவரும் வேண்டிப் பெற்றுக் கொள்வோமாக.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் ரேட்டில் பத்தாவது மைல்கல் தொலைவிலுள்ள சுழிபுரத்தில் அமைந்துள்ளது. ஸ்ரீ பத்திர கொளி அம்பாள் வீதி எனப் பாறிக்கப் பட்ட இடத்திலிருந்து வடக்குநோக்கி இருநூறு யார்தூரம் சென்ருல் அவள் ஆலயத்தை சென்றடையலாம். ஓங்கி வளர்ந்த பல பாரிய விருட்சங்களுக்கு மத்தியில் நாற்றிசையும் மக்கள் குடியிருப்புக்கு நடுவண் அம்பாள் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ருள். மிக அற்புதம் நிறைந்த இத்தலம் மகிமை மிகுந்தது. கோயில் மண்ணில் கால் வைத்ததும் மனதில் ஒரு சாந்தி கிடைக்கின்றது. பாரிய நோய்களால் பீடிக்கப்பட்ட பலர் ஆலய முன் மண்டபத்தில் தங்கி மருந்துவகை ஒன்றும் உட்கொள்ளாமல்கோயில் மண்ணில் புரண்டு படுத்து நோயைக் குணப்படுத்தி வருகின்றனர். இதனுல்தான் இக்கோயில் மண் அருள் நிறைந்தாக விளங்குகின்றது.

ஏறத்தாழப் பதினேழாம் நூற்ருண்டளவில் தென்னிந்யாவில் இருந்து வந்த சுவாமியார் ஒருவர் அம்பாளின் யந்திரத் தகடொன்றை இங்குள்ள கிளுவை மரத்தடியில் வைத்துப் பூசை செய்து வந்தார். அதனுல் இவ்வாலயத்தின் தலவிருட்சமாகக் கிளுவை மரம் போற்றப் படுகின்றது. இச்சுவாமியார் அன்ன ஆகாரமின்றி அம்பாளின் திருவடியைத் தொழுதலொன்றினையே தன்கருமமாகக் கொண்டொழுகினுர். அயலில் உள்ள அடியார்கள் யாராவது பால் கொடுத்தால் மாத்திரமே அருந்துவார். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் அவர் பூசித்துவந்த இயந்திரத் தகடு திடீரென மறைந்து போயிற்று! அதனுல் மனம் வருந்திய சுவாமியார் அயலில் உள்ள அடியார்களை அழைத்து இவ்விடத்தில் பத்திரகாளி அம்பாள் குடி கொண்டிருக்கிருள் நீங்கள் அவளை பொங்கலிட்டுப் பூசித்து உய்தி அடையுங்கள் எனக்கூறி மறைந்து விட்டார். இதன் பின்னர் இவ்வாலயத்தின் சூழலில் உள்ள மூதாதையர்களுள் பெரியார் ஒருவர் அம்பாளுக்கு மண்ணினுல் குடிசை சமைத்து வழிபட்டு வரலானுர். அம்பாளுக்குப் பொங்கல் படையல் முதலியன புரிந்து வணங்குவது வழக்கம். அம்பாளுக்குப் விருப்பமான படையல்'அவிச்சோறும் உவிச்ச கறியுமாகும்.'' பொங்கல் நடப்பதற்கு ஒரு கிழமைக்கு முன்பு மேலே குறிப்பிட்ட சுவாமியாரால் ஏட்டுச் சுவடி மூலம் ஆக்கிக் கொடுக்கப்பட்ட பத்திப் பாடலைப் பாடி அவளிடமிருந்து உத்தரவு பெற்றே பொங்கல் விழா தொடங்கப் படும். அம்பாளின் உத்தரவு கிடைக்கும்வரை இப் பாடல் தொடர்ந்து படிக்கப்படும். இந்நிகழ்ச்சி மிகுந்த பயபக்தியுடன் நடைபெறும், இந்த வழக்கம் இன்றும் நிலைத்துள்ளது.

அம்பாள் வீற்றிருந்த மண் குடிசை ஒரு நாள் தீக்கிரையானது. அதனுல் மனமுடைந்த அடியார்கள் கல்லினுல் அம்பாளுக்கு ஆலயம் அமைக்கப் பேரவாக் கொண்டார்கள். அடியவர்களிடம் பணம் சேர்த்து இப்பணியைத் தொடங்கினுர்கள். ஆனுல் பொருள் போதவில்லை. அம்பாளில் ஆழ்ந்தபக்தி கொண்ட அடியவர் ஒருவர் அவளது வாக்குப்படி மலேயா நாடு சென்று அங்குள்ள பக்தர்களிடம் போதிய பணம் பெற்று வந்து அப்பணத்தைக் கொண்டு கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலியன அமைக்கப்பட்டன. கும்பாபிஷேகம் நடைபெற்



றது. பின் இவ்வடியாரே பூசகராகவும் பணி ஆற்றி வந்தார். இவ்வடியாருக்குப் பின் இவரது மரபில் வந்த மற்றுமொருவர் இவ்வாலயப் பொறுப்பை ஏற்று இக்கைங்கரியங்களைச் செவ்வனே செய்து வந்தார், இவரது காலத்திலும் அம்பாளுக்கு இரண்டாவது தடவையாகக் கும்பாபிஷேகம்நடைபெற்றது

இதன்பின் 1975ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் நிர்வாகம் பரிபாலன சபையாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதைச் செவ்வனே பரிபாலிக்கும் பரிபாலன சபையினர் அம்பாளுக்கு வருடந்தோறும் பல விழாக்கள் எடுக்கின்றனர்.

தை மாதத்தில் பூரத்துடன் ஏகதின லட்சார்ச்சனையும் தைப்பொங்கலன்று அபிஷேகமும், தைப்பூசத்துக்கு அபி

ஷேகம்
கல் பூ
யன
திருவீ
மாசி
மாசி
லிய
அபிஷே
பெற்று
உலா
பங்
நடை
களே
சிக்கா
வரும்
விளக்
பெறு
இப்
ஏதும்

மூறை
பாளிட
நிகழ்ச்
கும்.
வாய்க்
பித்து
தொட
எங்கும்
நாள்
தொட
பிரிய
படிக்க
மணிய
என்னு
பெறும்
பொங்
கிழமை
எட்டா
வர். பி
பூரம்
விசேட
கல் ப
திருவீ

### ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஊஞ்சல் பாட்டு

உலகிடை வறுமையினுழலாமல்
உறுபிணி பழிபகை நலியாமல்
மலமிகு மிழிசெயல் புரியாமல்
மனமழி பொறிவழி திரியாமல்
நலமுறு முனதடி யிணைபேணும்
நமசிவ யவமுதை யருள்வாயே
பலகலைச் சுழிபுரப் பதிமேவும்
பத்திரகாளி மகேஸ் வரியே.

நால்வகை நெறிகளை நயந்தறியேன்
நாடிகள் மூன்ருெடு நடந்துணரேன்
மேல்வரு மாதரம் விரவுவெளி
மிளிர்சகஸ்ராரமெய் வீடமையேன்
நூல்வழி காண்பரி தானவளே
நுதல்வழி யாவருட் கனிதருவாய்
பால்வளச் சுழிபுரப் பதிமேவும்
பத்திரகாளி மகேஸ் வரியே.

ADVT-03503 ஆக்கம்: தேவஸ்தானம்


ஓம் பகவதி நமோநம

''வருந்தா வகை என் மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தா தொரு பொருள் இல்லை விண் மேவும் புலவருக்கு
விருந்தா வேலை மருந்தானதை நல்கும் மெல்லியளே.''

தரமான தமிழ், ஆங்கில, சினிமாப் படங்களின் ஒறிஜினல் வீடியோ பிரதிகள்,மற்றும் தொலைக்காட்சிப்பெட்டி வீடியோ டெக் என்பவற்றை குறைந்த வாடகைக்குப் பெறவும், சிறந்தமுறையில் 'வீடியோ றெக்கோடிங்' செய்து கொள்ளவும் என்றும் நினைவில் நிலைத்த பெயர்

★ **ஸ்கைலாக் வீடியோ** ★

**SKYLARK VEDEO**

சுழிபுரம்

# ...ரகாளி அம்பாள் தேவஸ்தான

## ...ர் (21-3-89) செவ்வாய்

## ...ன் வரலாறும் அருள் ஆட்சியும்

...க்கிரை ... மன ... கல்வி ... ஆலயம் ... கொண் ... ளிடம் ... ரியைத் ... ஆனுல் ... அம் ... ாண்ட ... வளது ... நாடு ... பக்தர்க ... பெற்று ... தைக் ... கிருகம், ... மண்ட ... ட்டன. ... டபெற்

ஷேகம் நடைபெற்று பொங்கல் பூசை படையல் முதலியன நடைபெற்று அம்பாள் திருவீதி உலாவருவாள்.

மாசி; மகாசிவராத்திரி, மாசி மகம், மாசிப் பூரம் முதலிய தினங்களில் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் திருவீதி உலா வருவாள்.

பங்குனி; இம் மாதத்தில் நடைபெறும் பொங்கல்விழாக்களே இக்கோவிலின் எழுச்சிக்காலமாகும். இம்மாதத்தில் வரும் முதற் செவ்வாயில் விளக்கேற்று வைபவம் நடைபெறும்.

இப்பொங்கலை (வேள்வியை) ஏதும் தடங்கல் வராது நன்



...ர பூச ... வந் ... ப் பின் ... மற்று ... லயப் ... க்கைங் ... வனே ... இவரது ... ளுக்கு ... யாகக் ... பற்றது ... ஆண்டு ... வாகம் ... ஒப் ... இதைச் ... ம் பரி ... அம்பா ... ம் பல ... னர். ... துடன் ... னையும் ... அபிஷே ... அபி

முறையில் நடத்துவதற்கு அம்பாளிடம் உத்தரவு பெறும் நிகழ்ச்சியே இவ் வைபவமாகும். முதற் பொங்கல் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆரம்பித்து இரவு பகலாகத் தொடர்ந்து ஆலயச் சூழல் எங்கும் நடக்கும். அடுத்த நாள் அதிகாலைப் பூசையுடன் தொடர்ந்து அம்பாளுக்குப் பிரியமான பக்திப் பாடல் படிக்கப்படும். பின் காலை 10.00 மணியளவில் மடை மாற்று என்னும் வைபவம் நடைபெறும். பின் இரண்டாவது பொங்கல் அடுத்த செவ்வாய்க்கிழமை நடைபெறும் இதை எட்டாம் மடை என்றும் சொல்வர். பின் பங்குனி உத்திரம், பூரம் ஆகிய தினங்களில் விசேட அபிஷேகமும் பொங்கல் படையல் ஆராதனைகளும் திருவீதி உலாவும் நடைபெறும்.

சித்திரை வருடப்பிறப்பன்று வருடம் பிறக்கும் நேரம் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெறும். பின் சித்திரா பௌர்ணமியன்று சித்திரைக் கதையும், கஞ்சி வார்ப்பும் இடம் பெறும். பின் பூரநட்சத்திரத்தில் அபிஷேகமும், திருவீதி உலாவும் இம்மாதம் அத்த நட்சத்திரத்தில் மணவாழக் கோலச் சங்காபிஷேகமும் நடைபெற்று அம்பாள் திருவீதி உலாவருவாள்.

வைகாசிப் பூரநட்சத்திரத்தில் அபிஷேகமும், திருவீதி உலாவும் நடைபெறும்

ஆனி உத்திரம், பூரம் ஆகிய தினங்களில் அபிஷேகம் நடைபெற்று பூரத்தில் அம்பாள் திருவீதி உலாவும் நடைபெறும்.

ஆடிப்பூரவிழா அம்பாளுக்குப் பெருவிழாவாக கொண்டாடப்பட்டு அம்பாள் திருவீதி உலா வருவாள். அத்துடன் ஆடி மாதச் செவ்வாய்களும் கொண்டாடப்படும்.

ஆவணி உத்திராட நட்சத்திரத்தன்று சங்காபிஷேகம் நடைபெற்று, அம்பாள் எழுந்தருளி மூர்த்திமுன் ஊஞ்சல் பாட்டுப்பாடிப் பெருவிழாக் கொண்டாடி திருவீதி உலாவும் நடைபெறும். பின் பூர நாளன்று அபிஷேகமும் திருவீதி உலாவும் நடைபெறும். புரட்டாதி நவராத்திரிவிழா வெகுசிறப்பாக ஒன்பது நாளும் அம்பாளைக் கொலு வைத்துக் கொண்டாடப்படும். பத்தாம் நாள் கன்னி வாழை வெட்டும் வைபவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும். பூரத்திருவிழாவும் கொண்டாடப்பட்டு அம்பாள் திருவீதி உலாவருவாள்.

ஐப்பசிப் பூரநாளன்று அபிஷேகம் நடைபெற்று அம்பாள் திருவீதி உலாவருவாள்.

கார்த்திகை விளக்கீடு நடாத்தி சொக்கப்பானை கொளுத்துதல் நடைபெறும். பூரநாளுங் கொண்டாடப்பட்டு அம்பாள் திருவீதி உலாவருவாள்.

மார்கழி மாதத்தில் திருவெம்பாவை வெகு சிறப்பாக நடைபெறும். அத்துடன் பூரத்திருவிழாவும் நடைபெற்று அம்பாள் திருவீதி உலாவருவாள்.

வருடம் முழுவதும் பெருவிழாக் கொண்டாடப்படும் எங்கள் அம்பாள் ஆலயத்துக்கு ஈழவளநாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் திரள் திரளாக வந்து குவிந்து தங்களது நேர்த்தியை நிறைவேற்றுவார்கள்.

கனியில் சுவையும் காற்றிலே இயக்கமும் கலந்தாற் போல நீ அனைத்திலும் கலந்தாய் உலகெலாம் தானாய் ஒளிர்வாய் போற்றி அன்னை போற்றி அமுதமே போற்றி. புதியதிற் புதியதாய் முதியதில் முதுமையாய் உயிரிலே உயிராய் இறப்பிலும் உயிராய் உண்டெனும் பொருளில் உண்மையாய் என்னுள்ளே நானெனும் பொருளாய், நாளையே பெருகத் தானென மாற்றுஞ் சாகரச் சுடராய் கலை நோய்தீர்க்கும் மருந்தின் கடலாய் பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிறாய் யானென தின்றியிருக்கும் நல்யோகியர் ஞானமா மகுட நடுத்திகழ் மணியாய் செய்கையாய் ஊக்கமாய் சித்தமாய், அறிவாய் நின்றிடும் தாயே நித்தமும் போற்றி போற்றி.

யாதுமாகி நின்றாய் காளி
எங்கும் நீ நிறைந்தாய்,
தீது நன்மையெல்லாம் காளி
தெய்வ லீலையன்றோ
பூதமைந்துமானாய் காளி
பொறிகளைந்துமானாய்
போதமாகி நின்றாய் காளி
பொறியை விஞ்சி நின்றாய்
இன்பமாகிவிட்டாய் காளி
என்னுள்ளே புகுந்தாய்
பின்பு நின்னையல்லால் காளி
பிறிது நானும் உண்டோ
அன்பளித்து விட்டாய் காளி
ஆண்மைதந்து விட்டாய்
துன்பம் நீக்கிவிட்டாய் காளி
தொல்லை போக்கிவிட்டாய்

என்னும் பாரதியாரின் பாடல்கள் எங்கள் அன்னையின் இயல்பினையும், சக்தியினையும், அருளையும் நன்கு எடுத்து உணர்த்துகின்றது.

ஆதிபராசக்தியே வீரத்தாயாக விளங்குகின்ற பொழுது துர்க்கா தேவியென உருவெடுக்கின்றாள். துர்க்கைக்கு கொற்றவை என்னும்மற்றொரு பெயருமுண்டு. பண்டைக்கால முடியுடை மூவேந்தரும் துர்க்காதேவிக்கு விழாவெடுத்தே போர்க்கோலம் பூண்டுபோர்க்களம் செல்வர் அத்தகைய அம்சம் பொருந்தியவளே நமது பத்திரகாளி அம்பாளும் ஆவாள், வீரம், கல்வி, செல்வம் மோட்சம்முதலிய யாவற்றையும் அளிக்கும் எங்கள் அம்பிகையின் அருளைப் பெற்றுயாவரும் உய்தியடைவோமாக.

### முக்கிய அறிவிப்பு

மேற்படி தேவஸ்தானத்தின் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இது சம்பந்தமான நிதி சேகரிப்பதற்கு பரிபாலனசபை அங்கத்தவர்கள்மட்டும்பொது மக்களிடம் வருவார்கள் என்பதையும், தகுந்த அத்தாட்சியின்றி எந்த ஒருவரிடமும் நிதி கொடுக்கவேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.


ஓம் சக்தி சக்தி சக்தியென்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவையும் கொல்லு
சக்தி சகதி சக்தியென்று சொல்லி - அவள்
சன்னிதியிலே தொழுது நில்லு.

ஓம் சக்தி தனையே சரணங் கொள்ளு - என்றும்
சாவினுக்கோர் அச்சமில்லை தள்ளு
சக்தி புகழாமமுதை அள்ளு - மது
தன்னிலினிப் பாகு மந்தக் கள்ளு.''

அன்பர்கள், அடியார்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் காளியின் அருட்கடாச்சம் கிடைக்க பிரார்த்திக்கிறோம்.

லீலா ஸ்ரோர்ஸ்

மார்க்கற் சங்கானை

''சர்வமங்கல மாங்கல்யே சிவே சர்வார்த்த சாதகே
சரண்யே திரியம்பகே காளி நாராயணி நமோஸ்துதே'

★ பாடசாலை உபகரணங்கள்
★ அழகுசாதனப் பொருட்கள்,
★ தினசரிப்பத்திரிகைகள், வாரமாத சஞ்சிகைகள்
★ எவர்சில்வர் சாதனங்கள்
★ ஆடம்பரப்பொருட்கள் ஆகியவற்றிற்கு

ஸ்கைலாக் ஏஜன்சி

பிரதான வீதி, சுழிபுரம்.

'புயமுண்டு குன்றத்தைப்போலே சக்தி
பொற்பாதமுண்டு அதன்மேலே
நியமமெல்லாஞ் சக்தி நினைவன்றிப் பிறிதில்லை
நெறியுண்டு; குறியுண்டு; குலசக்திவெறியுண்டு,
கருணைக்கடலாம் காளிஅருள் காத்திடும் அடியவரை,

கிருஷ்ண

இரும்புத்தொழிற்சாலை

பிரதான வீதி, சங்கானை.

உங்களுக்குத்தேவையான இரும்புக்கதிரைகள்,
மற்றும் தகரக்கொட்டகைகள்
வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

அன்புவடிவாகி நிற்பவள் துன்பெலாமவளழிப்பள்
ஆக்கம் நீக்கம் யாவும் அவள்செய்கை இதை
ஆர்ந்துணர்ந்தவர்க்குண்டுய்கை''

★ கட்டடப் பொருட்கள்
★ கெமிக்கல் இன்டஸ்றீஸ் C. I. C
★ ஈஸ்ரன் பெயின்ற் இன்டஸ்றீஸ்
★ இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் பிரதான விற்பனையாளர்கள்

பாக்கியரட்ணம்

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

163, 165 பிரதான வீதி, சங்கானை.

''மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே''

★ மிது வீடியோ மூவிஸ் ★

தரமான வீடியோ படப்பிரதிகளுக்கும்
புதியபழைய பாடல்களை ஸ்ரீரியோ முறையில்
ஒலிபதிப்பு செய்யவும் பாட்டா பாதணிகள்
பான்சிப் பொருட்கள், மற்றும் அன்பளிப்பு
பொருட்களுக்கும் சிறந்த ஸ்தாபனம்

மிது வீடியோ மூவிஸ்

பிரதான வீதி, சங்கானை.

# சேவையிலிருந்து பட்டம்பெற்ற ஆசிரியருக்கு பட்டதாரி சம்பளம்

1984 ஜனவரி முதலாம் திகதி முதல் 1988 ஜனவரி வரையும் பாடசாலைகளில் சேவைகளிலிருந்து பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு பட்டதாரி சம்பளம் வழங்குவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் சேவையிலிருந்துபட்டம்பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தில் வழங்கப்படும் படிவங்களை பெற்று அதனைப் பூர்த்தி செய்து இ மாதம் இருபத்தேழாம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் இத்திணைக்களத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி அறிவித்துள்ளார்.

## லொறி விபத்து பாதசாரி பலி

நுணுவிலில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லொறி விபத்தொன்றில் பாதசாரியொருவர் ஸ்தலத்திலேயே மரணமானார். இவரை மோதிய லொறி அருகிலிருந்த மின்கம்பத்துடன் மோதி நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்தையடுத்து லொறிச் சாரதி தலைமறைவானதினால் அப்பகுதியில் சிறிது நேரம் வீதித்தடையேற்பட்டது.


## PHOTO GLOSS

கலர் படச் சுருள்கள் HAYLEYS-ல் கொம்பியூட்டர் மூலம் எம்மால் பிரதியாக்கம் செய்யப்படுகின்றன. கொழும்பு – யாழ். தொடர்பு நேரடிப்பிரதிநிதி மூலம் எம்மால் மட்டுமே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வேறு நிறுவனங்கள் மூலம் தொடர்புகொண்டு படச் சுருள்களை இழக்க நேரிடின் அதற்கு நாம் பொறுப்பில்லை என்பதை அறியத்தருகிறோம் சமீபத்தில் பஸ்ஸில் வழிப்பறி கொள்ளையினால் தொலைந்த படச்சுருள்களுக்கு பதிவுசெய்யப்படாத வேறு நிறுவனங்கள் மூலம் அனுதரவாக கொழும்பு HAYLEYSக்கு தாங்கள் அனுப்பிய படச்சுருள்களுக்கு நாம் பாத்திரவாளிகள் அலல என்பதை அறியத்தருகிறோம்.

நிர்வாகி

**PHOTO GLOSS**
K. K. S. Raod, Inuvil.

03564



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## புதிய மாணவர்கள் 1988/89 கல்வி ஆண்டு

இப்பல்கலைக்கழகத்திற்கு கலை, விஞ்ஞான பீடங்களுக்கு 1988/89 கல்வி ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட சகல மாணவர்களுக்கும் ஆங்கிலப் பயிற்சி நெறி ஏப்ரல் மாதம் 17-ம் திகதி ஆரம்பமாக இருக்கிறது. ஆகவே புதிய மாணவர்கள் அனைவரும் இத்திகதியன்று பல்கலைக்கழகத்திற்கு சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர். இப் பயிற்சி நெறி மேற்படி சகல மாணவர்களுக்கும் கட்டாயமானதாகும்.

மருத்துவ பீட மாணவர்களுக்கு ஏப்ரல் மாதம் 17-ம் திகதி விரிவுரைகள் ஆரம்பமாகின்றன. எனவே அவர்கள் அனைவரும் இப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அன்றைய தினம் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதில் பதிவாளர்

03547



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1989 ஏப்ரல் 15-ம் தேதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்
   - தாவரவியல்
   - இரசாயனவியல்
   - விலங்கியல்
   - பௌதிகவியல்
   - கணிதமும் புள்ளிவிபரவியலும்
2. தற்காலிக செய்முறை காட்டுனர்
   - தாவரவியல்
   - இரசாயனவியல்
   - விலங்கியல்
   - பௌதிகவியல்
3. தற்காலிக போதனாசிரியர்
   - கணிதமும் புள்ளிவிபரவியலும்
   - பௌதிகவியல்

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபா செலுத்தி, இவ்வலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்தல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விபரங்களையும் தபால் மூலம் பெறவிரும்புவோர் ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையை 23×10ச மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதில் பதிவாளர்

யாழ்ப்பாணப்
டல்கலைக்கழகம், இலங்கை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1939. 03. 16

03548



## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் விபவ வருடம் பங்குனி மாதம் 9-ம் நாள் (22-03-89) புதன்கிழமை காலை 11-00 மணி தொடக்கம் 12-00 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்

திருநிறை செல்வன் **சுந்தரலிங்கம்** அவர்களுக்கும் ★ திருநிறை செல்வி **ராகினி** அவர்களுக்கும்
(போதனாசிரியர், தொழில் நுட்பக்கல் லூரி யாழ்.

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான கலியாண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமணவிழாவில் தங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 23-3-89 வியாழன் மாலை 3-00 மணி

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி வெங்கையா தனலட்சுமி
''திருவெங்கபவனம்''
மடத்தடி, தெல்லிப்பளை.

திரு. திருமதி நா. தம்பிராசா (J. P.)
''சத்தியபதி''
தெல்லிப்பளை.

03563



# W.M. மெண்டிஸ் அன் கோ லிமிற்டெற்

## புதிய விலை விபரம்

17- 03- 89 தொடக்கம் யாழ். மாவட்டத்தில் எமது உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| மெண்டிஸ் | எக்ஸ்ரா ஸ்பெஷல் | போத்தல் | 123–00 |
| ,, | ஸ்பெஷல் | ,, | 102–00 |
| ,, | ஸ்பெஷல் | ½ | 55–50 |
| ,, | ஸ்பெஷல் | ¼ | 31–00 |
| மெண்டிஸ் | கோல் லேபல் | போத்தல் | 88–00 |
| " | கோல் லேபல் | ½ | 50–50 |
| ' | கோல் லேபல் | ¼ | 30–00 |
| மெண்டிஸ் | றெட் லேபல் | போத்தல் | 74–00 |
| ,, | றெட் லேபல் | ½ | 42–50 |
| " | றெட் லேபல் | ¼ | 26–50 |
| மெண்டிஸ் | வெட் 88 | போத்தல் | 81–00 |
| " | வெட் 88 | ½ | 47–50 |
| ,, | வெட் 88 | ¼ | 28–00 |
| மெண்டிஸ் | பிரண்டி | போத்தல் | 173–00 |
| ,, | பிரண்டி | ¼ | 48–00 |
| மெண்டிஸ் | ஜின் | போத்தல் | 143–00 |
| ,, | ஜின் | ¼ | 40–50 |
| மெண்டிஸ் | றம் | போத்தல் | 143–00 |
| மெண்டிஸ் | வொட்கா | போத்தல் | 148–00 |
| ரொசாவின் கோப்பிபானம் | | ½ போத்தல் | 65–00 |

இவற்றை கொள்வனவு செய்யும்போது வெற்றுப்போத்தல் ஒப்படைத்தல் வேண்டும். அல்லது ரூபா 6/- அறவிடப்படும்

**யாழ். ஏக விநியோகஸ்தர்கள்:**

# "வாமாஸ்"

121/2, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்

03566

● கோல்டன் கிறினி 117 ஓட்டங்கள்

## நான்காவது போட்டியிலும இந்திய அணி படுதோல்வி

(அன்டேகுவா)

அன்டேகுவாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நான்காவது ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியிலும் இந்திய அணி மேற்கு இந்தியக் குழுவிடம் தோல்வியடைந்துள்ளது.

மேற்கு இந்திய அணியின் பிரபல துடுப்பாட்ட வீரரான கோல்டன் சிறினி சிறப்பாகவும் வேகமாகவும் 117 ஓட்டங்களைக் குவித்தது எட்டு விக்கட்டுகளால் இந்திய அணியை சுலபமாக தோற்கடிப்பதற்கு காரணமாக அமைந்தது.

முதலில் ஆடிய இந்திய அணி குறிக்கப்பட்ட ஐம்பது ஓவர்களில் எட்டு விக்கட்டுகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்திய அணி 44 ஓவர்களில் இரண்டு விக்கட்டுகளை மட்டுமே இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது.

ஐந்தாவதும் கடைசியுமான ஒரு நாள் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை கயானாவில் நடைபெறும். முதல் நான்கு ஒரு நாள் போட்டிகளிலும் இந்திய அணி தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

● கடும் சண்டையில் 300 கிளர்ச்சியாளர்கள் மரணம்

# 20,000 கிளர்ச்சியாளர்கள் ஜலலாபாத்மீது தாக்குதல்

(மாஸ்கோ)

ஆப்கானிஸ்தானின் ஜலலாபாத் நகரத்தை இருபதாயிரம் முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் சூழ்ந்துகொண்டு கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக மாஸ்கோ தொலைக்காட்சிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலிலும் பதில் தாக்குதலிலும் இருதரப்பிலும் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டதாகவும் இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. பதில்தாக்குதலில் முந்நூறு கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாக காபூல் வானொலி தெரிவித்தது.

ஜலலாபாத் விமான நிலையத்தைச் சுற்றிவர கடுமையான சண்டைகள் நடைபெற்றுவருவதாகவும் இப்பகுதிக்கு மேலதிக துருப்புக்களை அனுப்பிவைக்க ஆப்கான் அரசு மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

# இரு பாகிஸ்தான் அதிகாரிகள் ஜலலாபாத் மோதலில் கைது!

(காபூல்)

ஜலலாபாத்தில் இடம்பெறும் மோதல்களில் இரண்டு பாகிஸ்தானிய உயர்ராணுவ ஆலோசகர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக காபூல் வானொலி நேற்று தெரிவித்தது கிளர்ச்சியாளர்களுடன் இணைந்து ஆப்கானிஸ்தான் படைகளுக்கு எதிரான தாக்குதலில் இவர்கள் சம்பந்தப்பட்டதாகவும் காபூல் வானொலி தெரிவித்தது.

ஆப்கானிஸ்தான் மோதல்களில் கெரில்லாக்களுடன் பாகிஸ்தான் ராணுவ வீரர்களும் அதிகாரிகளும் பங்குபற்றுகின்றார்கள் என்பதை இச்சம்பவம் நிரூபித்துள்ளதாக காபூல் வானொலி மேலும் தெரிவித்தது இதனை உறுதிப்படுத்தும் விதமாக பத்திரிகையாளர் முன்னிலையில் இவர்கள் விரைவில் ஆஜர் செய்யப்படுவார்கள் எனவும் காபூல் வானொலி தெரிவித்தது.

ஜெனிவா ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறி நடந்து கொண்டுள்ளது என்பதை நிரூபிக்கும் முதலாவது சான்று இது எனவும் காபூல் வானொலி தெரிவித்தது எனினும் இச்செய்தியை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

## ராஜன் கதிர்காமர் கேடயம் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு

(விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சென்பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில், 50 ஓவர்கட்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி, 18-ம் திகதி யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பொழுது, யாழ்ப்பாணக் கல்லூரி வெகுசாதுரியமாக ஆடி ஒரு ஓட்டத்தால் வெற்றியீட்டி, ராஜன் கதிர்காமர் வெற்றிக் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

பூவா தலையாவில் வெற்றி பெற்ற சென்பற்றிக்ஸ் அணி 'பீல்ட்' செய்ய தீர்மானித்தது. யாழ்ப்பாணக கல்லூரி 50 ஓவர்களில் சகல விக்கற்றுகளையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. ஆர். குலசிங்கம் 52 ஓட்டங்களையும், டீ. மதியழகன் 18 ஓட்டங்களையும் எஸ் விஜேதன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஐ. லோயல் 36 ஓட்டங்களுககு மூன்று விககற்றுகளையும், எஸ். செல்வராஜ், ஐ. இம்மனுவேல், ஜீ வில்சன முறையே 36, 28, 32 ஓட்டங்களை கொடுத்து தலா 2 விக்கற்றுகளையும் கைப்பற்றினர்.

சென்பற்றிக்ஸ் அணி 48 4 ஓவர்களில் 165 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம இழந்தது.

ஜீ. வில்சன் அரை சதமும், எஸ் செல்வராஜ் 42 ஓட்டங்களும், யே நீககிலஸ் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ். சண்முகானந்தன் 35 ஓட்டங்கட்கு 4 விக்கற்றுகளையும், எஸ். ஜனார்த்தனன் 23 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கற்றுகளையும் வீழ்த்தினர்.

யாழ்ப்பாணக்கல்லூரி எஸ். சண்முகானந்தன் இப்போட்டியில் சிறந்த வீரராகவும், அதே கல்லூரி எஸ். ஜனார்த்தனன் சிறந்த பந்துவீச்சாளராகவும், எஸ் விஜேதன் சிறந்த பந்து தடுப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த துடுப்பாட்டக்காரராக சென்பற்றிக்ஸ் ஜீ. வில்சனும் விசேட பரிசுக்கு தகைமையுடையவராக அதே கல்லூரியைச் சேர்ந்த எஸ். செல்வராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## காஸா பகுதி வன்செயல்களில் 3 பலஸ்தீனர்கள் சுட்டுக்கொலை

(ஜெரூசலம்)

இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஸா பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் மூன்று பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய ராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர் மேலும் இருபது பேர் இம் மோதலில் படுகாயமடைந்தனர்.

இஸ்ரேலிய படைகள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படாவிட்டால் இப்பகுதியிலுள்ள பலஸ்தீனர்களின் வீடுகள் அழிக்கப்படுமென இஸ்ரேலிய ராணுவம் அறிவித்துள்ளது ஏற்கனவே இவ்வாறு பல வீடுகள் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் தொடர்ந்தும் வேலை நிறுத்தமும் பகிஷ்கரிப்பும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது பாடசாலைகளும் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையில் உள்ளன.

## கராச்சி இனக்கலவரங்களில் இதுவரை 26பேர் படுகொலை

(கராச்சி)

பாகிஸ்தானின் கராச்சி நகரில் தொடர்ந்து இடம்பெற்று வரும் வன்முறைச்சம்பவங்களில் இதுவரை இருபத்தாறு பேர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காரொன்றில் வந்தவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் பன்னிரண்டு பேர் கொலையுண்டது தெரிந்ததே.

முஸ்லிம்களின் இரண்டு பிரிவினரிடையே இங்கு நீண்டகாலமாக மோதல்கள் இடம்பெற்றுவருவது தெரிந்ததே. கலவரம் மேலும் பரவாமல் தடுப்பதற்காக கராச்சியிலும் ஹைதராபாத்திலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஐந்து நாள் பயணத்தின் பின்னர் 'டிஸ்கவரி' பூமிக்கு திரும்பியது

(கலிபோர்ணியா)

அமெரிக்க விண்கலமான, டிஸ்கவரி' தனது ஐந்து நாள் விண்வெளிப் பயண ஆய்வை முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பியுள்ளது. நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கலிபோர்ணியாவிலுள்ள தளத்தில் 'டிஸ்கவரி' வந்திறங்கியது.

இவ் விண்வெளிப் பயணம் எதிர்பார்க்கப்பட்டளவு பலாபலன்கள் எதனையும் தரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட சில விஞ்ஞானப் பரிசோதனைகளை இப்பயணத்தின் போது மேற்கொள்ள முடியாமல் போய்விட்டதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

நூறு மில்லியன் டாலர் செலவில் அனுப்பப்பட்ட இவ் விண்கலத்தில் திடீர் கோளாறு ஒன்று ஏற்பட்டுள்ளதாலேயே பரிசோதனைகளை எதிர்பார்க்கப்பட்டளவுக்கு சிறப்பாக செய்ய முடியாமல் போய்விட்டது. விண்வெளியில் முட்டைகள் பொரிப்பது பற்றிய பரிசோதனை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது.

## இரவு ஊரடங்கு

(நியூயோர்க்)

அமெரிக்க வாஷிங்டன் மாநில கவர்னர் இளைஞர்களுக்கு இரவுநேர ஊரடங்கு பிறப்பிக்க பொலிசாருக்கு அனுமதி அளித்துள்ளார். நடு இரவில் வீதிகளில் திரியும் இளைஞர்கள் போதை வஸ்துப் பாவனைக்கு உள்ளாவதைத் தடுக்கவே இந்த ஊரடங்கு பிறப்பிக்கப்படவுள்ளது. இதன்படி இளைஞர்கள் இரவு 11 மணிக்கு பின் நடமாடுவது சட்டப்படி தடுக்கப்படும்.

## மட்டக்களப்பில் திறந்தபல்கலைக்கழகம்

திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையமொன்று மட்டகளப்பில் திறக்கப்படவுள்ளது. இம்மாதம் இருபத்தி ஐந்தாம்திகதி மட்டககளப்பு பல்கலைக்கழகத்திலுள்ள கட்டடமொன்றில் இந் நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. தற்பொழுது கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களிலுள்ள திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையங்களிலேயே கிழக்குப் பகுதியை சேர்ந்த மாணவர்கள் உயர் கல்வியை மேற்கொண்டு வருகின்றனர்.


ராஜா டிரேட் சென்ரர்
RAJAH TRADE CENTRE
3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(வின்சர் சந்திக்கு அருகாமை)
எமது நிறுவனத்தில் சகலவிதமான எவர்சில்வர், இனுமல் வார்ப்பு, அலுமினியம், பிளாஸ்ரிக் மற்றும் தரமான பான்சி அயிட்டங்கள் யாவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகொள்ளவும்:
RAJAH TRADE CENTRE
No. 3, Stanley Road, Jaffna 03485



இலங்கை மின்சார சபை
(ற்ரான்ஸ்ஃபோமேர்ஸ்) மின்மாற்றிகளுக்குப் பெய்ன்ற் பூச்சு இடுதற்கான
கேள்விப் பத்திரங்கள்
யாழ்ப்பாணப் பிரதேசத்தினுள் (ற்ரான்ஸ்ஃபோமேர்ஸ்) மின்மாற்றிகளுக்குப் பெய்னற் பூச்சு இடுதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன, துப்புரவு செய்தபின் அன்ரி-கொறோஸிவ் அலுமீனியம் அல்லது சாம்பல் நிற பெய்ன்ற் பூச்சு 'ஸ்பிறே பெய்ன்ற்' ஆக இரண்டு தடவைகள் இடப்பட வேண்டி உள்ளன.
பருமஅளவு நோக்கத்திற்கென மின்மாற்றிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.
1 250 கே. வி, ஏ. க்குக் குறைவானவை எல்லாம் 11 கே வியும்—33 கே. வியும்
2 250 கே. வி. ஏ. க்கும் 630 கே, வி ஏ. க்கும் இடைப்பட்டமை 11 கே, வியும்—33 கே, வியும்
3 33 கே. வி. / 11 கே. வி. பிறைமறி 1 எம்- வி, ஏ. முதல் 2 எம். வி. ஏ. வரை தேவையான பொருட்கள் வழங்கப்பட மாட்டாது.
கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 1989 . 3 . 28 காலை 10 மணி.
சுன்னுகம், மின்சாரப் பொறியியலாளர்.
1989-03-09. யாழ்ப்பாணப் பிரதேசம். 03551



இலங்கை மின்சார சபை
'குரெஸ் ஆர்ம்ஸ்' குறுக்குச் சட்டங்கள்மீது 'பெய்ன்ற்' பூச்சு இடுதற்கான
கேள்விப் பத்திரங்கள்
யாழ்ப்பாணப் பிரதேசத்தினுள் 33. கே. வி, 11 கே.வி. மின்கம்பி வடங்களுக்கு உரிய 'குறுரஸ் ஆர்ம்ஸ் குறுக்குச் சட்டங்கள்மீது பெய்ன்ற் பூச்சு இடுதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. துப்புரவு செய்யப்பட்டபின் இரண்டு தடவைகள் அன்ரி - கொரோஸிவ் சிவப்பு பெய்ன்ற் பூச்சு இடப்படவேண்டி உள்ளது
1. 7 அடி 4 அங் × 2 அங் சனெல் இரும்பு 33 கே வி
2. 5 அடி 4 அங் X 2 அங் சனெல் இரும்பு 11 கே. வி
தேவையான பொருட்கள் வழங்கப்படமாட்டாது
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி; 28 3 1989, காலை 10 00 மணி
சுன்னுகம் மின்சாரப் பொறியியலாளர்
1989 03 09 ய ழ்ப்பாணப் பிரதேசம் 03550

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி

# இசை, நடன ஆசிரியர்கள் மே மாதத்தில் நியமனம்

புதிய இசை, நடன ஆசிரியர் நியமனங்கள் மே மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளன. இந்த ஆசிரிய நியமனத்திற்கான போட்டிப் பரீட்சை ஏற்கனவே நடாத்தப் பட்டுள்ளது.

போட்டிப்பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெற்றோரின் பட்டியல்கள் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினால் சம்பந்தப்பட்ட மாகாணசபைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன மாகாண கல்வி அமைச்சுக்கள் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளோரை நேர்முகப் ரீட்சைக்கு அழைத்து தகுதியானவர்களைத் தெரிவுசெய்யவுள்ளது. இசை, நடன ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுவோர் குறுகியகால சேவைக்கால முன் பயிற்சியின் பின் மே மாதம் முதலாம் திகதி முதல் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

போட்டிப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டுள்ளோரில் இசை நடன ஆசிரியர் நியமனத்திற்கான தகுதியுள்ளோர் அனைவருக்கும் நேர்முகப்பரீட்சையின் மூலம் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

## அமெரிக்க - இலங்கை
# மாணவர் பரிமாற்றத்திட்டம் இவ்வருடத்துடன் நிறுத்தம்

ஏ. எவ். எஸ். எனப்படும் அமெரிக்க வெளிக்கள சேவை இவ்வருடத்திற்கான தனது மணவர் பரிமாற்றத் திட்டத்தை நிறுத்திவைத்துள்ளது. செலவுகள் அதிகரித்துள்ளதாலும் இலங்கையின் பாதுகாப்பு நிலை சீரற்றுள்ளதாலுமே இம் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் வருடாந்தம் மூன்று மில்லியன் டாலர் நட்டம் ஏற்படுவதால் இச்செலவைக் கட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது இதில் பங்குகொள்ளும் மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் நாலாயிரம் டாலர் செலவிடப்படுகின்றது.

இலங்கை போன்ற வறிய நாடுகளுக்கு இப்பணத்தில் ஒரு பகுதி வழங்கப்படுகின்றது இங்கு மாணவனொருவன் இதற்காக ஆயிரம் டாலர் மட்டுமேசெலுத்தவேண்டியுள்ளது எனினும் இதனை ஒழுங்குபடுத்துவதற்காக இத் தொகையை2,500 டாலராக ஏ. எவ். எஸ். நிர்ணயித்துள்ளது.

# அதிபர் தெரிவுப் பரீட்சை ஏப்ரல் 21,22ல் நடைபெறும்

கடந்த வருடம் நடைபெற இருந்து, ஒத்திவைக்கப்பட்ட அதிபர் தரம் 1, 2, 3 பதவி உயர்வுக்கான போட்டிப் பரீட்சை ஏப்ரல் மாதம் 21-ம், 22-ம் திகதிகளில் நடைபெறும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் இறுதிப் பரீட்சை ஏப்ரல் 24-ம் திகதி முதல் ஆரம்பமாகி சம்பந்தப்பட்ட பயிற்சிக் கல்லூரிகளில் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருட பிற்பகுதிகளில் நடைபெற இருந்த மேற்படி இரு பரீட்சைகளும் ஜனாதிபதித் தேர்தல், தெற்கில் நடந்த வன்செயல்கள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டன. இப்பரீட்சைகளை ஏப்ரல் மாத விடுமுறைகளின் போது நடத்துமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பரீட்சை ஆணையாளரை வற்புறுத்தி வந்தது. இதைத்தொடர்ந்து கடந்த வாரம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த மகாசிவமும் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த பஞ்சலிங்கமும் பரீட்சை திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து இவ்விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாக மேற்படிதீர்மானம் எடுக்கப்பட்டதென சங்கத்தின் பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

### ஜெயலலிதாவின்...

ஷனர் தெரிவித்தார்.

அண்ணா தி. மு. க. வின் ஜெயலலிதா அணியின் ஆதரவாளரான தனகோபால் என்பவர் செய்த முறைப்பாடொன்றையடுத்தே திரு. நடராஜன் மோசடிக் குற்றச்சாட்டில் கைதாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிட விரும்பிய தனகோபால் என்பவர் அதற்கான கட்டுப்பணமாக 20,000 ரூபாவை திரு. நடராஜனிடம் கொடுத்து அதற்கான பற்றுச்சீட்டையும் பெற்றிருந்தார்.

எனினும் தேர்தலில் அவருக்கு இடம் ஒதுக்கப்படாததால் பணத்தை திருப்பித் தருமாறு நடராஜனிடம் கேட்டபோது கடுமையாகத் தாக்கப்பட்டும் மிரட்டப்பட்டும் உள்ளார். பணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டும் அவரிடமிருந்து பறிக்கப்பட்டது.

### கருணாநிதியின்...

தமிழ்குடிமகன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையின் விதிக்கமைய இந்த ராஜினாமாக் கடிதம் சொந்த விருப்பத்தில் எழுதப்பட்டதா என ஜெயலலிதாவிடம் விளக்கம் கேட்டு தான் கடிதம் ஒன்று எழுதியுள்ளதாயும் அவர் மேலும் தெரிவித்தார். ஜெயலலிதாவின் சொந்த கையெழுத்தில் அவரின் கடிதம் நேற்று முன்தினம் மாலை தமக்கு அடையாளம் தெரியாத ஒருவரினால் கிடைக்கப்பெற்றது என தெரிவித்த தமிழ்குடிமகன் இது யாரினால் ஒப்படைக்கப்பட்டது என தமக்கு தெரியாது என அவர் தெரிவித்தார்.

ஜெயலலிதா இக்கடிதத்தை முன்னரே மறுத்திருக்கலாம் என்றும் ஆனால் அவர் அப்படி செய்யவில்லை என்றும் தமிழ்குடிமகன் தெரிவித்தார்.

ஆனால் ஜெயலலிதா தாம் அரசியலில் இருந்து விலகப் போவதாக எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை என தெரிவித்துள்ளார். எந்தவித கடிதத்தையும் எந்த முறையிலும தாம் சட்டபேரவை தலைவருக்கு அனுப்பவில்லை என ஜெயலலிதா மேலும் தெரிவித்தார். ஆனால் முன்னர் தயாரித்த தமது ராஜினமாக் கடிதத்தை தாம் வாபஸ்வாங்கி அதை தமது உதவியாளர் நடராஜனிடம் கொடுத்திருந்ததாகவும் ஆனால் தமிழக பொலிஸார் நடராஜனின் வீட்டை சோதனை போட்டு அக்கடிதத்தை எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்தனர் எனவும் ஜெயலலிதா தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் ராஜினமா கடிதம் பத்திரிகைகளிடம் ஒப்படைக்கப்பட்டதற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என சென்னை நகர பொலிஸ் அதிகாரி பி துரை தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக வெளிவந்த செய்திகள் பொய்யானவை எனவும் அவ்வதிகாரி மறுத்துள்ளார். நடராஜனின் வீட்டில் கண்டெடுக்கப்பட்ட ஜெயலலிதாவின் கடிதம் நகலானது எனத்தெரிவித்த பொலிஸார், மூலக்கடிதம் என்னவானது என்பது பற்றி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனத்தெரிவித்தனர்.

# பொலனறுவவில் தாக்குதல்

நேற்றுக்காலை பொலனறுவ மாவட்டத்தில் உள்ள கடவத்தகம எனும் சிங்கள கிராமத்திற்கு பாதுகாப்பு அளித்து வந்த இராணுவ முகாம் ஒன்றின் மீது ஜே.வி.பியினர் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குலை இராணுவத்தினரும் ஊர்காவல்படையினரும் இணைந்து முறியடித்துவிட்டதாகவும் மூன்று பேர் கைது செய்யப்பட்டதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

### 'ஜெ' பதவி...

வித்துள்ளார்.

தனது உடல்நிலை காரணமாக பதவியிலிருந்து விலகுவதாக ஜெயலலிதா தீர்மானித்தது உண்மைதான் எனவும் தெரிவித்துள்ள அவர், இது தொடர்பாக ஜெயலலிதா சட்டசபை சபாநாயகருக்கு எழுதிய கடிதம் அவரது உதவியாளர் நடராஜனிடமே இருந்ததாகவும், பின்னர் அதனை அனுப்ப வேண்டாம் என ஜெயலலிதா தெரிவித்துவிட்டதாகவும் சொன்னார்.

### சபாநாயகம்...

திய கல்வி அமைச்சில் பணிப்பாளராகப் பதவியேற்றுள்ளார். இவர் திருமலையிலுள்ள மாகாண கல்வி அமைச்சுக்கே இடமாற்றம் செய்யப்பட்டிருந்தாராயினும், அவர் அதனை ஏற்க மறுத்ததையிட்டு மத்திய கல்வி அமைச்சில் கடந்த வாரம் பதவியை ஏற்றார்.

## பாராளுமன்றம் செல்லாதவரை
# ஈரோஸ் 13 எம்.பிக்களுக்கும் கொடுப்பனவுகள் கிடையாது

ஈரோஸ் அமைப்பில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யபபட்ட பதின்மூன்று உறுப்பினர்களும் பாராளுமன்றம் செல்வதைத் தொடர்ந்து புறக்கணித்து வந்தால் அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவுகள் கிடைக்க மாட்டாது என பாராளுமன்ற செயலாளர் திரு நிகால் செனிவரத்தின தெரிவித்துள்ளார்.

ஈரோஸ் அமைப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பதின்மூன்று உறுப்பினர்களும் பாராளுமன்ற பகிஷ்கரிப்பைக் கைவிட்டு, அரசியல் சாசனத்திற்கு அமைய சத்தியபிரமாணம் எடுத்துக் கொண்டால் அவர்களுக்குரிய வேதனம் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஈரோஸ் அமைப்பினர் நான்கு கோரிக்கைகளை முன் வைத்து அவை தீர்க்கப்படும் வரை பாராளுமன்றம் செல்வதில்லை என தெரிவித்திருந்தது தெரிந்ததே.

### யாழ் வவுனியா...

லுள்ள பிரபல அரச பங்குடமை வீதி அமைப்பு நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது இதனை இங்குள்ள வீதியமைப்பு ஒப்பந்தக்காரர்கள் ஆட்சேபித்ததை அடுத்தே திருத்த வேலைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்த வீதித்திருத்தத்திற்கான கருங்கல்லைபெற்றுக்கொள்வதற்கென ஓமந்தை ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள கல்லுடைக்கும் தொழிற்சாலைகளின் வேலைகளும் நிறுத்தப்பட்டுள்ளன இந்த வீதி அமைப்பு வேலைகள் ஏற்கனவே தாமதமாகியுள்ளமையினாலும், தற்போது மேலும் தடைகள் ஏற்பட்டுள்ளமையினாலும் இப்பகுதிக்கென வழங்கப்பட்ட பணத்தை சம்பந்தப்பட்ட வங்கிகள் மீளப்பெற்று வேறு பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு செலவு செய்ய முனையலாம் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

### கோபாலசாமி...

லுக்கு மன்னிப்புக் கோர வேண்டுமென்று கூறியுள்ளார் அமைச்சர் ரஞ்சன விஜேரட்ண. இலங்கையிலுள்ள இந்தியத் தூதரிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்.

### தமிழீழப்...

கும் என்றும் குறிப்பிட்டார்.

கலைஞர் கருணாநிதி தமிழக முதல்வராக உள்ளதால் தமிழ்த் தீவிரவாதிகள் தமிழகத்தில் ஆதரவைத் திரட்டுவதற்கான சந்தர்ப்பம் அதிகளவிலுள்ளதாகவும், அமெரிக்காவிலிருந்து வெளியாகும் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் டாக்டர் சுவாமி தெரிவித்தார்.

முதலமைச்சர் கருணாநிதி இதற்கு ஆதரவளிப்பார் எனவும் தெரிவிக்கும் சுவாமி தமிழக மக்களின் உணர்வுகளை மீண்டும் தூண்டிவிடுவதன் மூலம் இதனைச் செய்யவேண்டுமெனவும் சொன்னார். கருணாநிதி எம். ஜி ஆரைப் போல இருக்கமாட்டார் எனவும் டாக்டர் சுவாமி குறிப்பிட்டார்.

எம். ஜி. ஆர். விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வாங்குவதற்காக பெருமளவு பணத்தைக் கொடுத்தார். 1983-ம் ஆண்டு முதல் 1987-ம் ஆண்டு வரையில் நூறு மில்லியன் (இந்திய) ரூபா விடுதலைப் புலிகளுக்கு எம். ஜி. ஆர். வழங்கியதாகவும் டாக்டர் சொன்னார்.

## காலமானர்
### நீக்கிலாப்பிள்ளை ஜேம்ஸ் B. A.

(முன்னாள் அதிபர், புனித சூசையப்பர் கல்லூரி, மாதகல்)

நீக்கிலாப்பிள்ளை ஜேம்ஸ் B. A. (முன்னாள் அதிபர், புனித சூசையப்பர் கல்லூரி, மாதகல்) அவர்களின் பூதவுடல் 21-3-89 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து புனித கதிரை மாதா ஆலயத்திற்குத் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டுச் சில்லாலைச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

ஜெயமன்றம்
சில்லாலை

03596

## காலமானர்
### பவானந்தன் - சரவணனந்தன் (பவான்)

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும் V M ரோட்டை சேர்ந்தவருமான பவானந்தன் சரவணனந்தன் (பவான்) 19-03-1989 ல் அகால மரணமானர் இவர் பவானந்தன் (முன்னாள் ஆசிரியர் எதியோப்பியா) மனோன்மணி ஆகியோரின் புதல்வரும் சண்முகானந்தன் சிவரமணன் ஆகியோரின் சகோதரரும் சின்னையா சிவசம்பு (இளைப்பாறிய ஆசிரியர் சிவசக்தி கோவிலடி அச்சுவேலி) கமலாச்சி காலம் சென்ற சந்தையா பெரியதம்பி, புவனேஸ்வரி (V M. ரோட் பருத்தித்துறை) ஆகியோரின் பேரனுமாவர். அன்னாரின் இறுதிக் கிரியைகள் உபய கதிர்காமத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து திங்கள் (20-03-1989) காலை 10 00 மணிக்கு ஆனை விழுந்தான் மயானத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

உபய கதிர்காமம்,
புலோலி.

தகவல்
குடும்பத்தினர்

03593

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் இராஸ்வி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 20-03-1989 அச்சிட்டு வெளியிடப்பெற்றது